R 2755 (page 14) (தோந்தேடுக்கப்பட்ட பத்திகள்)

# கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

## "WHAT THINK YE OF CHRIST?"

R2757 : page 16

"அன்பு நியாயப்பிரமாணத்தினுடைய நிறைவேறுதலாய் இருக்கின்றது" என்று தேவ ஏவுதலின் பேரில் அப்போஸ்தலன் குறிப்பிட்டதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை! எந்த அளவுக்கு அன்பானது இருதயத்தில் காணப்படுகின்றதோ, அவ்வளவாய் ஒருவரால் திவ்விய பிரமாணத்தினை நிறைவேற்றிட முடியும் என்பதை நம்மால் எளிமையாய்க் காணமுடிகின்றது. இது எந்தவிதத்திலும், "மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்" எனும் வேதவாக்கியம் அறிக்கைப்பண்ணும் காரியத்திற்கு முரணப்டுகிறதில்லை. யூதர்களால் நியாயப்பிரமாணத்தினைக் கைக்கொள்ள முடியாததற்கான காரணம், அவர்கள் தங்கள் இருதயத்தில் பூரண அன்பைப் பெற்றிராதவர்களாய் இருந்தார்கள் மேலும் இதே இடர்பாடானது - அதாவது ஒருவேளை நம்முடைய உடன்படிக்கையில் கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின் வாயிலாக நமக்கு அநுகூலமான ஏற்பாடு பண்ணப்படவில்லை என்றால், நம்முடைய மாம்ச இருதயங்களுக்குப் பதிலாக, புதுச்சிருஷ்டிகளென நம்முடைய நோக்கங்களானது தேவனால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால் - புதிய உடன்படிக்கைக்குரியவா;களாகிய நம் வழியிலும் மேற்கூறிய இதே இடர்பாடானது தடங்கலாய் இருந்திருக்கும். இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படிக்குக் கிறிஸ்துவின் மூலமாய் தேவனுடன் ஓர் உடன்படிக்கை உறவிற்குள் பிரவேசித்தவர்கள் . . . ஒவ்வொரு சிந்தை மற்றும் வார்த்தைகள் விஷயத்திலும் அன்பு எனும் முழு அளவுகோலினுடைய / தரநிலையினுடைய முழுமையான அளவுக்கு நடக்க முடியாவிட்டாலும் , அவர்கள் 'ஆவியின்படி நடக்கின்றவர்களாக," அன்பின்படி நடக்கின்றவர்களாக இருக்கின்றனர். இவ்விதத்திலான அவர்களது பிரயாசங்களானது, அவர்கள் ஏதோ பூரணர்களாய் இருப்பதுபோன்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றது மற்றும் கர்த்தருடைய அறிவுரைகள், அவரது வார்த்தைகளினுடைய வழிக்காட்டுதல்கள், வழிநடத்துதல்கள் கீழ் - அவர்கள் நாளுக்குநாள், வாராவாரம், வருடாவருடம் . . . இந்த நல்ல வழியில் முன்னேற்றம் அடைந்து சென்றுகொண்டிருப்பார்கள் - கர்த்தருடைய வார்த்தையிலும், திட்டத்திலும், குணலட்சணத்திலும் அன்பானது வெளிப்படுகிறதை அவர்கள் காண்கையில், அன்பு என்றால் என்னவென்று அதிகமதிகமாய்க் கற்றுக்கொள்ளுகின்றனர் - மேலும் பிதாவின் சாயலாயுள்ள பூரண அன்பை உடைய தேவனுடைய நேச குமாரனின் சாயலை அடைவதற்கு அதிகமதிகமாய் நாடுகின்றனர் மற்றும் அதிகமதிகமாய் அதை அடைகின்றனர்.

நம் சித்தங்களானது (அதுவும் மாம்சத்தினுடைய அபூரணங்களின் காரணமாக வார்த்தைகளிலும், கிரியைகளிலும் நம் சித்தங்களை நாம் அபூரணமாய் வெளிப்படுத்துபவர்களாய் இருப்பினும், நம் சித்தங்களானது) இந்த இலக்கோடு முழு இசைவாய்க் காணப்படத்தக்கதாக - முன்பே சொல்லியுள்ளது போன்று, பூரண அன்பு எனும் இவ்விலக்கானது இருதயத்தில் அடையப்பட வேண்டியதாயிருக்கின்றது. தேவன் பேரிலான அன்பு எனும் இக்கிருபையில் வளருவதற்கு, மனுக்குலத்தின் மீதான அன்பிலும், அதிலும் விசேஷமாக நீதிக்கு இசைவாகவும், இணக்கமாகவும் காணப்படுபவர்கள் மீதான அன்பிலும் வளர்வதையும் அவசியமாக்குகின்றது ( 1 யோவான் 4:8,20,21;5:1).

------------------------------------------

See more Books & Articles at www.foodfornewcreature.com